**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS. 238/2023

பெயர் : ரவீந்திரன் (PW1) (Cross )

த/க/பெ. :

தேதி : 17.11.2025

ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சொத்து ஒழுகை மங்கலம் கிராமம், சின்ன செட்டி தெருவில் உள்ள வீடு மனைகட்டு என்றால் சரிதான். என் தந்தை சிங்கப்பூரில் பணி புரிந்து வந்தார் என்றால் சரிதான். என் தாயார் வீட்டுக்குடித்தனம் என்றால் சரிதான். என் தாயார் முத்துலெட்சுமி அம்மாள் 1989 ம் ஆண்டும், தந்தை 2005 ல் காலமானார் என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி தமது 19 ம் வயதில் தந்தைக்கு உதவியாக சிங்கபூர் சென்றார் என்றால் சரிதான். சிங்கப்பூரில் அவர் 30 ஆண்டுகள் இருந்தார் என்றால் சரியல்ல. 2 ஆண்டுகள் மட்டுமே இருந்தார். அவர் சிங்கப்பூரில் தான் இருந்தார் என்றாலும் வழக்கிற்காக நான் பெய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 2 ம் பிரதிவாதியும், தகப்பனார் வெளிநாட்டில் இருந்த போது முதல் பிரதிவாதியின் சகோதரிக்கு திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரியல்ல. என் தந்தை சிங்கபூரில் இருந்த போது தந்தையின் பணத்தில் தான் திருமணம் நடந்தது. 2 ம்பிரதிவாதி அப்போது இங்கு தான் இருந்தார், அவருக்கு வயது 13. முதல் பிரதிவாதிக்கு எந்த ஆண்டு திருமணம் நடந்தது என்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முதல் பிரதிவாதி திருமணத்தின் போது என் தாயார் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். என் தந்தை வயோதிகம் காரணமாக இந்தியா திரும்பிய பின்னரும் 2 ம்பிரதிவாதி சிங்கப்பூர், சவுதி அரேபியா போன்ற நாடுகளுக்கு சென்று சம்பாதித்தார் என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதி வெளிநாட்டில் சம்பாதித்த பண்தை எங்கள் தந்தையிடம் கொடுத்துள்ளார் எனறாலும் வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அதன் படி 2 ம்பிரதிவாதி பணத்தை கொண்டு என் பெற்றோர் நிறைய சொத்துக்கள் வாங்கி உள்ளார்கள் என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதிக்கும் வெளிநாட்டில் சம்பாதித்த பணத்தை கொண்டு சீர்காழியில் சொத்து வாங்கி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதி முறையாக சொத்தை வைத்துக் கொள்ளாமல் ஏலத்திற்கு வந்து அதற்கான தொயையும் 2 ம்பிரததிவாதி கொடுத்தார் என்றால் சரியல்ல. இந்த விபரங்கள் அனைத்தும் என் பெற்றோர் மற்றும்

முதல் பிரதிவாதிக்கு தெரியும் என்றால் சரியல்ல. 2ம்பிரதிவாதி குடும்பத்திற்காக அதிகம் சம்பாதித்துக் கொடுத்துள்ளதால் என் தாயார் 1987 ல் முதல் பிரதிவாதி என் தந்தை மற்றும் எனக்கு தெரிந்தே 2ம் பிரதிவாதிக்கு சொத்தை வாய் மொழியாக கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 2ம் பிரதிவாதி 30 ஆண்டுகளாக இருக்கிறார் என்றால் சரியல்ல, 8 ஆண்டுகள் இருக்கும். 1987 முதல் அவர் தாவா சொத்தில் வசித்து வருகிறார் என்றாலும் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும், 1ம்பிரதிவாதியும் தாவா சொத்தில் வசிக்க வில்லை என்றால் கடந்த 8 ஆண்டுகளாக குடியில்லை. 8 ஆண்டுகளாக மட்டும் தான் இல்லை என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதிக்கு 1975 ல் திருமணம் நடந்தது. திருமணத்தற்கு பின்னர் முதல் பிரதிவாதி சீர்காழியில் தான் வசித்து வருகிறார் தாவா சொத்தில் இல்லை என்றால் சரிதான். நானும் முதல் பிரதிவாதியும் தாவா சொத்தில் வசித்து வருவதாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்ய வில்லை என்றால் சரிதான். தாவா சொத்து உள்ள தெருவில் எனக்கு வீடு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு எதிர் வீடு. அந்த சொத்து என் தந்தை கருணாகரனுக்கு பாத்தியம் என்றால் சரிதான். அவர் தான் 1974 ல் வாங்கினார். என் தந்தை மற்றும் பிரதிவாதிகள் செலவில் அதில் வீடு கட்டப்பட்டது என்றால் சரியல்ல. தற்போது அந்த சொத்தில் நான் தான் வசித்து வருகிறேன். 2013 ல் இருந்து வசித்து வருகிறேன். நான் போய் தான் வீடு கட்டினேன். வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், 1974 ல் என் தந்தை இடத்தை வாங்கி என் தந்தை மற்றும் 2ம்பிரதிவாதி செலவில் வீடு கட்டிஅதில் நான் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. என் தந்தை 2001 ல் சொத்தை எனக்கு பாத்திய படுத்தி கொடுத்தார். உயில் எழுதிக் கொடுத்தார். 2001 ல் இருந்து 2021 வழக்கு போடும் வரை நான்சொத்தில் தான் இருந்ததேன் என்றால் சரியல்ல. என் தந்தை உயில் எழுதிய பின்னர் தான் வீடு கட்ட ஆரம்பித்தோம். வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் உயிலில் தார்சு வீடு உள்ளது என்றாலும் என்னால் கட்டப்பட்ட தார்சு வீடு என்று உயிலில் என் தந்தை சொல்லி உள்ளார் என்றாலும் சரிதான். 2001க்கு முன்பு இருந்தே நான் குடும்பத்துடன் தாவா சொத்திற்கு எதிரே உள்ள வீட்டில் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதிக்கு சீர்காழி வீடும், 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தும் உள்ளதால் முறையற்று சொத்தை அடையயும் நோக்கில்

நயவஞ்சகத்துடன் என் தந்தையிடம் உயிளல் எழுதி பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த விபரம் தெரிந்து பிரதிவாதி என்னை கேட்ட பின்னர் பின் யோசனை செய்து தாவா சொத்தை இடையூறு ஏற்படுத்தும் வண்ணம் இந்த வழக்கை போட்டுள்ளேக்ன என்றால் சரியல்ல. 2ம் பிரதவாதி 30 ஆணடுகளுக்கு மேலாக தாவா சொ'தை அனுபவித்து வருலுகிறார் என்றாலும் நான் சொத்தில் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக சொல்லி பொய்யாக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி எனக்கு தெரிந்தே 30 ஆண்டுகளுக்கு மேலாக சொத்தை அனுபவவித்து வருவதால் Ouster முறையில் சொத்தில்எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவாசொர்ததில் எனக்கோ, முதல் பிரதிவாதிக்கோ எவ்வித பாகமும் கிடைக்க கூடியது அல்ல என்றாலும் வழக்கு காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தரங்கம்பாடி மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் தாவா சொத்தில் 2ம் பிரதிவாதி மராமத்து வேலை செய்வதை பயன் படுத்தி முதல் பிரதிவாதியை துாண்டி விட்டு OS. 81/2021 வழக்கு பாட்டுள்ளார் என்றால் தெரியும். அந்த வழக்கில் இடைக்கால உறுத்துக்கட்டளை கிடைக்காததால் தான் அந்த வழக்கை வாபஸ் பெற வைத்து நான் இந்த வழகது போட்டுள்ளேன் என்றால் முதல் பிரதிவாதிக்கு உடல் நலம் சரியில்லாமல் போனாதால் அந்த வழகக்கை கவனிக்க இயலாமல் நீதிமன்றம் செல்லவில்லை அதன் பின்னர் தான் என்னிடம் வந்து நியாத்தை கேட்டுகுமாறு சொன்னார்கள். அதை பற்றி இந்த வழக்கில் சொல்லாததற்கு குறிப்பிட்ட காரணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. இந்த விபரங்களை மறைத்து வழக்கு போட்டுள்ளதால் என் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. என் சகோதரி போட்ட வழக்கில் நான் ஆஜராகவில்லை என்றால் அது பற்றி தெரியவில்லை. நானும் 1ம்பிரதிவாதியும் 2ம் பிரதிவாதியை பழிவாங்கும் நோக்கில் இந்த பாக வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ஏற்கனவே இருந்த வீட்டை முழுவதுமாக இடித்துவிட்டு கட்டினார்களாள என்றால் இல்லை. முன்னால் இருந்து ஓட்டு வீட்டை இடித்து விட்டு கட்டினார்கள். என் தாயார் இறந்து 34 ஆண்டுகளும் தந்தை இறந்து 16 ஆண்டுகளும் ஆகிறது என்றால் சரிதான். தாவா சொத்து என் தாயாருக்கு சொந்தமான சொத்து என்றால் சரிதான். தாயார் இறந்து 34 ஆணடுகள் கழித்து தாவாசொத்து 2ம் பிரதிவாதிவசம் உள்ளது தெரிந்தே நான் இந்த வழக்கை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்னர் நான் அங்கு தான் இருந்தேன். என் வழக்குரை

பக்கம் 3, பத்தி 4 வழக்கு மூலத்தில் எந்த தேதியில் பாகம்கேட்டேன் என்று குறிப்பிட வில்லைஎன்றால் அது குறித்து தெரியவில்லை. என் வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்றாலும் தள்ளுபடி செய்யக்கூடியது என்றாலும் சரியல்ல. என் தாயார் பெயரில் உள்ள கிரய பத்திரம் , வில்லங்கசான்று, வா.சா.ஆ. 1 முதல் 3 தவிர எங்கள் சுவாதீணம் குறித்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே பல ஆண்டுகளாக பேச்சு வார்த்தை இல்லைஎ ன்றால் 3 ஆண்டுகளாகதான் இல்லை. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் வழக்கிற்குற்கு முன்பு அறிவிப்பு கொடுததுள்ளேனாஎன்றால் அவர்கள் கேவியட் போட்டதால் நான் வழக்கு போட்டேன். அதன் பின்னர் வீட்டை இடிக்கும் முன்பு நான் அறிவிப்பு கொடுத்தேன். அந்த ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி தாவா சொத்தை 19 89 ம் ஆண்டு முதல் 2 ம் பிரதிவாதி தாவா சொத்தில் முழு உரிமையுடன் குடியிருந்து வருகிறார் என்றாலும் எனக்கோ, முதல் பிரதிவாதிக்கோ Ouster மறையில் எனக்கோ முதல் பிரதிவாதிக்கோ சொத்தில் உரிமை இல்லை என்றால் சரியல்ல.